காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள்
பிறப்பிப்பவர் : திருமதி. கலைச்செல்வி மோகன், இ.ஆ.ப.,

ந.க.எண்.11847/2012/பஅ3 நாள். 10 .[illegible]2023

பொருள் : பணியமைப்பு - காஞ்சிபுரம் மாவட்டம் - குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம் - திரு.பூ.விநாயகம் (லேட்), இளநிலை உதவியாளர் - 22.12.2004 அன்று பணியிடைக்காலமானவர் - அவரது மகள் திருமதி.வி.ஜீவா என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் வழங்கப்பட்டது - இளநிலை உதவியாளர் பணிநிலையில் பணிவரன்முறை செய்து உத்தரவிடுதல்.

பார்வை
1 காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செ.மு.ந.க.எண். 11847/2012/பஅ3 நாள்-14.09.2018.
2 வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ), திருப்பெரும்புதூர் கடித ந.க.எண்.11628/2023/அ1 நாள் 31.07.2023.
3 அரசாணை (நிலை) எண்.48 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) துறை நாள் 26.02.2021.
4 அரசு கடித எண்.6895/இ3/2021-5 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி(இ3) துறை நாள் 14.12.2021.
4 தனியரின் பணிப்பதிவேடு
5 சம்மந்தப்பட்ட ஆவணங்கள்

-----------

காஞ்சிபுரம் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து 22.12.2004 அன்று பணியிடைக்காலமான திரு.பூ.விநாயகம் (லேட்), என்பவரின் மகள் திருமதி.வி.ஜீவா என்பவருக்கு, பார்வை 1-ல் காணும் செயல்முறைகளின்படி, கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் பணிநியமனம் வழங்கி உத்தரவிடப்பட்டு, 20.09.2018 அன்று முற்பகல் காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்து, தற்போது திருப்பெரும்புதூர் ஊராட்சி ஒன்றியத்தில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வருகிறார்.

பார்வை 3ல் காணும் அரசாணையின்படி, 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டவர்களுக்கு, பத்தி எண்.5(5.1), (5.2)ல், விதித்தளர்வு (Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு (Excemption of Government Orders) தேவைப்படாத நிலையிலும், பார்வை 4ல் அரசு கடிதத்தில் வழங்கப்பட்டுள்ள தெளிவுரை பத்தி எண்.3(1)ன்படி, இளநிலை உதவியாளர்" பதவிக்கான நியமன அலுவலர் மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) என்ற நிலையில், மாவட்ட ஆட்சித்தலைவர்களால் பணிநியமனம் வழங்கப்பட்டிருப்பினும், மாவட்ட ஆட்சித்தலைவர்களே இளநிலை உதவியாளர்களுக்கு பணிவரன்முறை உத்தரவு வெளியிட்டு, தொடர்புடைய அரசுப் பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, காஞ்சிபுரம் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில், கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்டு, திருப்பெரும்புதூர் ஊராட்சி ஒன்றியத்தில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வரும் திருமதி.வி.ஜீவா என்பவருக்கு **இளநிலை உதவியாளர் பணிநிலையில் 20.09.2018 அன்று முற்பகல்** கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு பணிவரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது.

**"தனியர் எவ்வித விதித்தளர்வு மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு ஏதும் தேவைப்படாத நிலையில் உள்ளார் என்ற அடிப்படையில், அரசாணை (நிலை) எண்.48 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) துறை நாள் 26.02.2021 பத்தி எண்.5 (5.1)-ன்படி, பணிவரன்முறை செய்யப்பட்டுள்ளது. விதித்தளர்வு மற்றும் அரசாணை விலக்கு தேவையென பின்னர் தெரிய வந்தால் இவ்வாணை எவ்வித முன்னறிவிப்புமின்றி இரத்து செய்யப்படும்".**

மாவட்ட ஆட்சித்தலைவர்,
காஞ்சிபுரம்.

**பெறுநர்**
திருமதி.வி.ஜீவா,
இளநிலை உதவியாளர்,
திருப்பெரும்புதூர் ஊராட்சி ஒன்றியம்

(உரிய வழிமுறையாக)

**நகல்** – இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் இயக்ககம், சென்னை.
**நகல்** – வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ), திருப்பெரும்புதூர் ஊராட்சி ஒன்றியம்.
**நகல்** – பஅ3 இருப்பு கோப்பு.